அக்டோபர்: 31

## ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யுங்கள்!

வாசிக்க: கலாத்தியர் 5:13-16

கலாத்தியர் 5:13 இவ்வசனத்தில் ஊழியம் என்று சொல்லப்படுகிற வார்த்தையை சேவை அல்லது பணிவிடை என்று மொழிபெயர்க்கலாம்.

ஊழியம் செய்வது என்றால் என்ன?

சேவை என்பது தேவனுடைய அன்பை செயலில் காண்பிப்பதாகும். சேவை என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு செய்யும் பணிவிடையாகும். சேவை என்பது தன்னார்வமாகப் பிறருக்குப் பணி செய்வதாகும். சேவை என்பது பரிசுத்தவான்களுக்குச் செய்யும் பணிவிடையாகும். சேவை என்பது நமது நேரம், அறிவு, திறமை, பணம் மற்றும் சரீர உழைப்பு ஆகியவற்றின் மூலம் பிறருக்கு பணிவிடை செய்வதாகும்.

நம்மைவிட மேலான பொறுப்பிலிருப்பவர்களுக்கு நாம் எந்த அளவிற்கு இறங்கி பணிவிடை செய்கிறோமோ அதே அளவிற்கு நம்மை விட கீழான நிலையில் உள்ளவர்களிடமும் தாழ்மையாக இருந்து பணிவிடை செய்வதே உண்மையான சேவையாகும்.

இருபுறமும் மரங்கள் அடர்ந்த அந்த மலைப்பாதை. செங்குத்தான உயரமாக சென்று கொண்டிருந்தது. அங்கு எப்பொழுதும் பனிப்பொழிவு காணப்படும். மாலையில் சற்று அதிகமாகவும். இரவில் மிகக் கடுமையான பனிப்பொழிவு காணப்படும். மலைப்பாதையில் பயணம் செய்பவர்கள் சூரியன் மறைவதற்குள் அப்பாதையைக் கடந்து சென்றுவிடுவர்.

இம்மலைப்பாதையில் ராஜூ, ரமேஷ் என்ற இருவரும் நடந்து சென்றனர். வாலிபனான ரமேஷ் தன் உடல் வலிமையினால் வேகமாக நடந்து முன்னேறிச் சென்றான். ராஜுவோ தான் நடப்பதற்கு தேவனே பெலனை தரவேண்டும் என்ற ஏக்க பெருமூச்சோடு நடந்தான். முன்னாகச் சென்ற ரமேஷிடம் தன் இயலாமையினால் நடக்க முடியாமல் படுத்திருந்த ஒருவர் உதவிகேட்டார். ஆனால் ரமேஷ் என்னாலேயே நடக்க முடியவில்லை, இருட்டுவதற்குள் வேகமாகச் செல்ல வேண்டும் என்று தன் உள்ளத்தில் நினைத்தவனாய் உதவ மறுத்து நடந்து சென்று விட்டான்.

பின்னால் வந்த ராஜூ அவருக்கு உதவி செய்ய மனதாய் நடக்க முடியாத அந்த மனுஷனை தூக்கிக்கொண்டு நடக்க புறப்பட்டார். ராஜுவின் நடை தளர்ந்த போதிலும் நாம் ஒரு மனிதனுக்கு உதவி செய்கிறோம் என்ற உற்சாகத்தில் சோராமல் நடக்க ஆரம்பித்தார்.

சற்று தூரத்திலேயே முன்னால் சென்ற ரமேஷ் குளிரின் கொடுமையினால் அவன் இரத்தம் உறைந்து மரித்துக் கிடப்பதைக் கண்டான். அதைப் பார்த்த ராஜூவுக்கு புரிந்தது. நாம் இன்னும் உயிருடன் இருப்பது, தான் உதவும்படி நினைத்து மனிதனைச் சுமந்து கொண்டு வருவதினால் இருவர் உடலும் அனலுறைக்க இரத்தம் உறையாமல் இருப்பதினால்தான், தான் உயிருடன் இருப்பதை உணர்ந்து, நன்றி

சொல்லிக் கொண்டே நடந்து  மலைப்பாதையைக் கடந்தார்.

## கேள்வி:

1. சேவை என்றால் என்ன?
2. நம்மை விட கீழான நிலையில் உள்ளவர்களிடமும் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும்?
3. ராஜு உயிருடன் இருப்பதற்கு என்ன காரணம்?